அதிகாரட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
02 JUN 1997
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 30 5 - 1997 இதழ்: 13

நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்; துன்மார்க்கர் ஆளும் போதோ ஜனங்கள் தவிப்பார்கள்.

நீதிமொழிகள் 29: 2

# வில்லியம் மேதர் ஞாபகார்த்த பெண்கள் நிலையம்

## 56 வது வருடாந்த விழா

வில்லியம் மேதர் ஞாபகார்த்தப் பெண்கள் இல்லத்தின் 56 வது ஆண்டு நிறைவு விழா, மே மாதம் 10ம் திகதி மருதனார்மடத்தில் அமைந்துள்ள மேற்படி இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தென்னிந்திய திருச்சபை, அங்கிலிக்கன் திருக்சபை, மெதடிஸ்த திருச்சபை ஆகிய மூன்று திருச்சபைகளும் சேர்ந்து நடாத்தும் இப் பெண்கள் இல்லத்திற்கு உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் கலாநிதி செல்வி. சி வி. செல்லையா அவர்கள் தலைவியாகப் பணியாற்றி வருகின்றார். அவரின் சிறப்பான வழிநடத்தலால் இம் முறை அதிவிசேஷமாக, பெருந்திரளான மக்களுடன் இவ் விழா நடைபெற்றது.

இவ்வில்லத்தின் வளாகத்தில் அமைந்துள்ள சிற்றாலயத்தில் காலை 8. 30 மணிக்கு ஆங்கிலிக்கன் திருச்சபை சார்பில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்ட ஆராதனையைத் தொடர்ந்து, 9. 45 மணிக்கு விற்பனைவிழா இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணக்கல்லூரியின் விவசாயக் கல்லூரி அதிபர் திரு. ரி. குகதாசன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். பின்னர் இல்லப் பிள்ளைகளினாலும் உடுவில் மகளிர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியினராலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## தென்னிந்திய திருச்சபையின் பொன் விழா



திருமதி. டெய்சி கோபாலரத்தினம்

தென் இந்திய சினட் மகா சபையில் நீண்ட காலம் செயலாளராகவிருந்தவர், 1971ல் வட்டுக்கோட்டையில் பேராயர் டி. ஜே. அம்பலவாணரின் பிரதிஷ்டை ஆராதனையிற் கலந்துகொண்டு அதிகாரப் பத்திரம் வாசித்தவர்.

### பண்டத்தரிப்பில் மறுமலர்ச்சி

அழகிய கிராமமாகிய பண்டத்தரிப்பு புத்துயிர் பெற்றுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை இயங்கத்தொடங்கியது. சென்ற சனிக்கிழமை 14 – 5 – 97 ஹரியட் வின்ஸ்லோ பெண்கள் இல்லம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அன்று நடைபெற்ற புனரமைப்பு விழாவில் பேராயர் அவர்களும், திட்டப் பணிப்பாளர் திரு. வி. மித்திரரஞ்சன் அவர்களும் கலந்து கொண்டனர். சபை ஊழியன் வண. S அசோக்குமார் இவ் வைபவத்திற்கு தலைமை தாங்கினார். பிரஜைகள குழுத்தலைவர் திரு. A V. துரையப்பா, திரு. P. தனராஜசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். திரு. S. J. மணிக்கம் நன்றியுரையை நிகழ்த்தினார்.

✲

### மூளாய்த் தேவாலயத்தில் ஞாபகார்த்த நடுகல்

மூளாய்த் திருச்சபையின் நீண்ட காலச் செயலாளரும் 1995ல் மரித்துப் போனவருமாகிய திரு. கந்தையா தர்மரத்தினம் அவர்களின் ஞாபகார்த்த நடுகல் சென்ற ஞாயிற்றுக்கிழமை (18- 5- 97) நற்கருணை வழிபாட்டினைத் தொடர்ந்து பேராயர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து திருமதி தர்மரத்தினம் அவர்களால் வருகை தந்த யாவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

### யாழ்ப்பாணக்கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா ஸ்தாபகர் தினமாகிய ஜூன் மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

✲

### மக்கள் அவை

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் அவை சென்ற சனிக்கிழமை 17- 05- 97 கத்தோலிக்க ஆயர் இல்லத்திற் கூடியது. யாழ் மின்சார விநியோகம், யாழ் வைத்தியசாலை புனரமைப்பு, மீள் குடியேற்றம், போக்குவரத்துப் பிரச்சனைகள் பொது மக்கள் தாக்கப்படுதல் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. திரு S. அருமைநாயகம் கல்வியதிகாரி இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

✲

### உதயதாரகை

#### புதிய ஆசிரியர்

இறையியலில் மேற்படிப்பினை மேற்கொள்வதற்காகத் திரு. ஜி. நடராஜா அவர்கள் வெளி நாடு செல்லவிருப்பதனால் உதயதாரகையின் தமிழ்ப்பகுதியின் ஆசிரியராக சங்கானைச் சபை ஊழியன் திரு. பா. தேவதாஸ் அவர்களை ஆதீன செயற்குழு நியமித்தது.

### நினைவில் நிறுத்துக!

| | | | |
|---|---|---|---|
| மே | வெ | 30- | பேராயர் S. J. பிரதிஷ்டை |
| ஜுன் | ஞா | 1- | ஊழியர் இளைப்பாற்று நிதி |
| | தி | 2- | பொன்விழா மலர்க்குழு |
| | பு | 4- | ஊழியர் சங்கம் |
| | பு | 4 | C. T. S. செயற்குழு |
| | ச | 7- | நிதி நிர்வாகக் குழு |
| | ஞா | 8- | நற்செய்தி ஓய்வுநாள் |
| | தி | 9- | ஆதீனநிர்வாக சபை |
| | ஞா | 15- | திடப்படுத்தல் — மட்டக்களப்பு |
| | வெ | 20- | உதவிக்குரு அபிடேகம் கொழும்பு |
| | வெ | 27- | யாழ் கல்லூரி பரிசளிப்பு |
| | தி | 30- | பேராயர் D. J, A, பிரதிஷ்டை |

# திருச்சபை ஐக்கியத்தின் பொன் விழா ஆண்டு 1947 - 1997

# சில பண்டைய கிறிஸ்தவ மரபுச் சின்னங்கள் யாழ்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அலெக்சாந்திரியாவின் கிலமெந்து (Clement of Alexandria) கிறிஸ்தவர்கள் தங்கள் முத்திரை மோதிரங்களில் பதிக்கக் கூடிய மரபுச் சின்னங்களை 'பைடகோகஸ்' (Paidagogos) என்ற நூலில் குறிப்பிடுகிறார். இனி அவர்கள், தொழும் உருவங்கள், பட்டயம், வில், குடிக்கும் கிண்ணங்கள், ஆடையற்ற உருவங்கள் போன்ற சின்னங்களைப் பயன்படுத்தலாகாது. ''ஆனால் புறா, மீன், காற்றின் முன் செல்லும் கப்பல், அல்லது பொலிகறட்டீஸ் உடைய (Polycrates) முத்திரை போல் யாழ், செலூக்காஸ் உடைய (Seleucus) முத்திரை போல் நங்கூரம், போன்ற மரபுச் சின்னங்களையே பயன்படுத்த வேண்டும். அச்சின்னம் ஒரு மீன்பிடிப்பவனாகில், அது ஒரு அப்போஸ்தலனை நினைவூட்டும் அல்லது தண்ணீரிலிருந்து மீட்கப்பட்ட மக்களை அதாவது திருமுழுக்குக் கூடாக மீட்கப்பட்டவர்களை ஞாபகப் படுத்தும்''

கிலமெந்து இப்படியான முத்திரைகளை உபயோகித்த இரண்டு பெயர்களைக் குறிப்பிடுகிறார். நங்கூரத்தை முத்திரையாக பாவித்த செலூ காஸ், யாழைப் பாவித்த பொலிகறட்டீஸ். இச்சந்தர்ப்பத்தில் தவிர்த்து செலூக்காஸ் என்று ஒருவரை நாம் சபை வரலாற்றில் அறியோம். ஆனால் பொலீகறட்டீசை அறிவோம். இவர் கிலமெத்தின் காலத்தில் எபேசு பட்டணத்தின் ஆயர். கி பி. 190ல் ஏற்பட்ட உயிர்த்தெழுந்த திருநாள் கருத்து மாறுபாடுகளில் ஆசிய ஆயர்களின் தலைவராக, பாப்பரசர் விக்டரை எதிர்த்தவர் என்று வரலாறு கூறுகிறது. இவரது மோதிர முத்திரை யாழ் ஆக இருக்கக் கூடும் என்பதற்கு சில ஆதாரங்கள் உண்டு.

மாறாக, கிலமெந்து குறிப்பிடும் செலூக்காஸ், பொலிகறட்டீஸ் ஆகியோர் சீரியா மன்னன் செலூக்காஸ் I (கி. மு. 358 – 280), சாமோஸ் (Samos) தேசத்தின் கொடுங்கோலன் பொலிகயட்டீஸ் (கி. மு. 7ம் நூற்றாண்டு) ஆகியோரையும் குறிக்கலாம். இவர்களும் இப்படியான சின்னங்கள் பொருந்திய மோதிரங்களைப் பயன்படுத்தினதாக வரலாற்று ஆவணங்கள் உண்டு.

அந்தியோகியாவின் ஆயர் இக்னாசியு (Ignatius) கி. பி 107ம் ஆண்டு ரோமாபுரிக்கு இரத்தச் சாட்சி மரணத்தை எதிர்நோக்கிப் பயணம் செய்த பொழுது தன்னை சிமிர்னாவில் சந்தித்து வாழ்த்த தூதுக்குழுக்களை அனுப்பிய சபைகளுக்கு நன்றிக் கடிதங்களை வரைந்தார். எபேசுவுக்கு வரைந்த கடிதத்தில் பின்வரும் வசனத்தைக் கவனிக்கலாம்.

''உங்கள் ஆயருடைய விருப்பத்திற்கு இசைந்து நடக்கிறீர்கள் விரும்பத்தக்கதுவும் இதுவே எளிதில் மறக்க முடியாததும் கடவுளுக்குகந்ததுமான உங்கள் மூப்பர் கூட்டம் யாழின் நரம்புகள் இணங்கி இசை எழுப்புவது போல் ஆயருடன் இசைந்து செயல்படுகிறார்கள் அப்படி உங்கள் ஒருமைப் பாட்டாலும் கூட்டு இன்னிசையாலும் இயேசுகிறிஸ்துவையே உங்கள் கீதமாகத் தொனிக்கிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் இணைந்து ஒரே பாடகர் குழுவாக அமைந்து ஒருமைப்பாட்டாலும் கூட்டுஇன்னிசையாலும், இறைவனையே உயிர்ப்பண்திறமாகக் கொண்டு இசைந்த ஒரே குரலில் இயேசுகிறிஸ்துவிற் கூடாக தந்தைக்குக் கீதம் முழங்குங்கள்''

ஆயர் இக்னாசியு எபேசு சபைக்கு எழுதிய காலத்தில் எபேசு நகரத்தின் ஆயராயிருந்தவர் ஒனேசிமு (Onesimus). ஒரு ஆயருடைய பணியை விளக்குவதற்கு இக்னாசியு ஒரு யாழை உவமையாகப் பயன்படுத்தியதை நினைவில் கொண்டு ஒனேசிமு யாழைத் தனது முத்திரையாகத் தெரிந்திருக்கலாம். மாறாக இதற்கு முன்னரே இம்முத்திரையை எபேசு சபை தெரிந்திருக்கக் கூடும். ஒனேசிமுவினால் எபேசுவிலிருந்து தனக்குக் கொண்டுவரப்பட்ட வாழ்த்துக் கடிதத்தில் யாழ் முத்திரையைக் கவனித்த இக்னாசியு அதை ஓர் உவமையாக வைத்து தனது செய்தியை எபேசு சபைக்கு எழுதியிருக்கக் கூடும். எதுவாயினும், இசையோடு சம்பந்தப்பட்ட இவ்வுருவகம் இக்னாசியுவின் மனத்திற்கு வந்ததிற்கு காரணம் உண்டு. எபேசு சபையில் எளிதில் மறக்க முடியாத மூப்பர் கூட்டம் மாத்திரமன்று, யாழின்பக்கவாத்தியத்துடன் பாடிய புகழ் பெற்ற பாடகர் குழுவும் அங்கு இருந்தது.

வேறொரு தொடர்பையும் கவனிக்கலாம். எபேசுவைச் சேர்ந்த மூப்பரில் ஒருவராகிய யோவான் என்பவர் கி. பி. 95ம் ஆண்டு வரையில் திருவெளிப்பாடு (வெளிப்படுத்தின விசேஷம்) நூலை வரைந்தார். புதிய ஏற்பாட்டில் ''யாழ்'' ஐந்து தடவை குறிக்கப் பட்டிருக்கிறது. இவற்றில் நான்கு தடவையும் திருவெளிப்பாடு நூலிலேயே. 5:8. 14:2, 15:2, 18:22. இவற்றில் 5:8 முக்கியம் வாய்ந்தது. பரலோகத்தின் காட்சியை வர்ணிக்கும் எபேசுவைச் சேர்ந்த யோவான், யாழ் இசையுடன் சேர்ந்த துதி தோத்திரங்களையே கவனிககிறார். ஒவ்வொரு மூப்பர்களும் ஒவ்வொரு யாழ் வைத்திருந்தார்கள். அவர்கள் புதியதொரு பாட்டைப் பாடிக்கொண்டிருந்தார்கள் ''தகுதி பெற்றவர் நீரே ஆட்டுக்குட்டி தகுதி பெற்றது'' என்று பாடினார்கள். இவற்றின் நான்கு முக்கிய பதங்கள். 'மூப்பர்கள்'', ''யாழ்''. ''பாட்டு'', ''தகுதி பெற்றது'' மேல் குறிதத இக்னாசியுவின் கடிதத்தின் பாகத்திலும் தோன்றுகின்றதை பொருட்படுத்தாது விடமுடியாது.

யாழ் பழைய ஏற்பாட்டில் பல சந்தாப்பங்களில், முக்கியமாக சங்கீதங்களில் பல தடவை தோன்றுகின்றது. ஆனால் புதிய ஏற்பாட்டில் அது தோன்றும் சந்தர்ப்பங்கள் எதுவிதமாகவோ எபேசு சபையுடன் தொடர்புள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பவுல் அப்போஸ்தலனும் எபேசு சபையை கிலமெந்துவின் காலத்திற்கு ஏறத்தாழ 140 ஆண்டுகளுக்குமுன் அறிந்திருந்தார். அச்சபை இசை ஆர்வத்தை அறிந்தவராகவே பின்வரும் வாசகத்தை எழுதினார் போலும். ''உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள். புகழ்ப்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம் பெறட்டும் உளமாற இசைபாடி ஆண்டவரைப் போற்றுங்கள்'' (எபே. 5:19)

வட்டுக்கோட்டையிலுள்ள தென் இந்திய திருச்சபை யாழ் ஆசன ஆலயத்தின் பலிபீட மேசைமுன் பதிக்கப்பட்ட சின்னங்களில் பனை மரம், அதன மேல் பொறிக்கப் பட்ட யாழ் கவனிக்கப்படக்கூடும். பனைமரம் யாழ்ப்பாணத்துடன் இயற்கை ரீதியிலும், யாழ். யாழ்ப்பாணடதுன் மரபுவழிக் கதை ரீதியிலும் தொடர்புள்ளதை நாம் அறிவோம். திருச்சபையீன் முதற் காலத்திலேயே, யாழ், அதன் வெவ்வேறு நரம்புகள் இணங்கி இசையெழுப்புவது போல, இறைமக்கள் தங்கள் ஆயர்களுடனும், திருச்சபையின் தலையாகிய கிறிஸ்துவுடனும் இணங்கி செயற்படுவதே தங்களுக்குக் கொடுக்கப்படும் அழைப்பும், சவாலும், ஆசீர்வாதமும் என்பதில் மகிழ்ச்சியடைந்து வந்திருப்பதற்கு யாழ் ஓர் பொருத்தமான சின்னமாகத் துலங்கியிருக்கிறது யாழ். திருச்சபை ஏறெடுக்கும் துதி நன்றி, மகிழ்ச்சிப் பாடல்களின் சின்னம். இவை பாடல்களாக மாத்திரமன்று பணிகளாக தோன்றுவதற்கும், யாழ் ஓர் சிறந்த சின்னமாக விளங்குகிறது.

D. J. A.



# அற்புத சுகம் கொடுத்த அற்புதர் இயேசு

நான் சென்னை பேராயத்தில் முழு நேரஊழியராக, மிஷனெரியாக தற்போது காஞ்சிபுரம் குருசேகரம், பானுசெட்டிசத்திரம் (Inland Mission) மையமாகக் கொண்டு கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறேன்.

நான் டயோசிசன் அச்சகத்தில் பணி புரியும்போது, ஆண்டவரின் அழைப்புப் பெற்று என் வேலையை ராஜினாமா செய்து ஊழியம் தொடரகாத்திருந்தேன். சென்னை பேராய நற்செய்தி வாரியத்தின் வாய்ப்பளித்தார்கள், லூக் 9: 1, 2 – 6 வசனங்களை எனக்கு ஆண்டவர் வாக்குத்தத்தங்களாகக் கொடுத்தார். இறைப்பணி தொடர்ந்தேன். ஊழியத்தில் வியாதியஸ்தர் குணமடைந்தார்கள் செவிடர் கேட்டனர், சப்பாணி நடந்தனர், குருடர் பார்வையடைந்தனர், பெரும்பாடு நீங்கிற்று, பிசாசுகள் விரட்டப்பட்டன. இந்த சாட்சிகளை கண்டவர்கள், கேட்டவர்கள் ஆச்சரியப்பட்டு, ஆண்டவரை சொந்த தெய்வமாக ஏற்றுக் கொண்டு, திருமுழுக்கு பெறவும், திருச்சபைகள் உருவாகவும் ஆண்டவர் கிருபையளித்தார்.

என் ஊழியப்பாதையில், வாழ்க்கையில் பலசோதனைகள், சோர்வுகள், எதிர்ப்புகள், இவைகள் எல்லாவற்றையும் ஜெபத்தின் மூலமாகவும், விசுவாசத்தின் அடிப்படையில் மேற்கொண்டு வந்தேன்.

ஒரு நாள் திடீரென்று என்னுடைய மூக்கில் இரத்தம் கொட்டியது. சிறிது நேரத்தில் நின்று விட்டது. இதனால் மருத்துவரிடம் சென்றேன். அவர் சரியாகிவிடும் என்று சொல்லி 5 நாட்கள் ஊசி போட்டார். அதனால் எந்த பலனும் இல்லை திடீர், திடீரென்று மூக்கு வழியே இரத்தம் வரும். அதை நான் பொருட்படுத்தாமல் இருந்தேன.

நாளுக்கு நாள் எனக்கு வலியும் அதிகரித்தது. மூக்கு அடைப்பும் ஏற்பட்டது. எனவே பெரிய Hospital க்கு போகலாமென்று 05 -09 – 96 அன்று K. M C. க்கு சென்று பார்த்தேன். அவர்கள் பரிசோதனை செய்து, Sugar அதிகம் இருப்பதாகவும் B. P (Blood Pressure) இருப்பதாகவும் கூறி சிகிச்சை அளித்தார்கள். அதிலும் குணமடையவில்லை பிறகு E N. T. பிரிவுக்கு அனுப்பினார்கள்- அவர்கள் பரிசோதனை செய்து 2 வாரம் சிகிச்சையளித்து, உங்களுக்கு Sugar உள்ளது ஆகையால் இப்போது அறுவை சிகிச்சை செய்ய முடியாது. தொடர்ந்து மாத்திரை சாப்பிடுங்கள் சரியாகிவிடும் என்றார்கள்.

ஆனால் என்னுடைய மூக்கில் சதை வளர்ந்து உணர்வு இழந்து, சுவாசிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். K. M. C. மருத்துவமனையில் சரியாக சுகம் கிடைக்காததால் 14–10–96 அன்று Rainy Hospital க்கு சென்று பார்த்தேன். அங்கு E. N. T. மருத்துவர் Dr. Suresh Babu பரிசோதனை செய்து, X-ray எடுத்து பார்த்துவிட்டு, C. T Scan எடுக்கும்படி கூறினார். Dr Anand அவர்களின் உதவியால் Sivitha-வில் C. T. Scan எடுத்து Report - உடன் Rainy க்கு வந்தோம். தொடர்ந்து 5 நாட்கள் பரிசோதனை நடந்தது. C. T. Scan Report ஐ பார்த்தவுடன் Dr. Suresh Babu இது Cancer

(03 ஆம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு:-

சிலரை எப்போதும் ஏமாற்றலாம்: எல்லாரையும் கொஞ்ச நேரம் ஏமாற்றலாம்: ஆனால் எப்போதும் எல்லாரையும் ஏமாற்ற முடியாது.

★ ஆபிரகாம் லிங்கம்-

உதயதாரகை

✲✲✲

## பல்கலைக்கழக வேலைநிறுத்தம்

ஏப்ரில் மாதம் 24ம் திகதி தொடக்கம் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் வேலை நிறுததத்தில் குதித்துள்ளனர். பல வருடங்களாக முன்வைத்த கோரிக்கைகள் இன்னமும் பரிசீலிக்கப்படவில்லையென்பதில் நியாயம் இருக்கின்றது.

ஆனால் பல்கலைக்கழக ஊழியர்கள் இன்றைய மாணவர்களின் இக்கட்டான நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். ஊரடங்கு சட்டம், கொழும்பு செல்வதில் இடர்பாடு, பணக்கஷ்டம், தங்குமிட பிரச்சனை எல்லாமே அவர்களை வாட்டி வதைக்கின்றன. விரக்தியின் விளிம்புக்கே மாணவர்கள் வந்துவிட்டனர்.

இந்த மாணவ மாணவியர் எப்படியோ ஒரு பட்டதாரியாகி குடும்பத்திற்கும் தமக்கும் நல்ல வாழ்வினை அமைத்துக்கொள்ளலாம் என்று கனவு காண்பவர்கள். ஒவ்வொரு மாதமும் அவர்களுக்குப் பெருஞ் சுமையாக அமைகின்றது.

இன்று கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் நமது பிரதேசத்தின் கல்விப் பெருக்கத்தையே பாதிக்கின்றது. பல்கலைக்கழக வேலை நிறுத்தம் என்றால், பரீட்சைகள் இல்லை நூல்நிலையம் இல்லை, புதிய மாணவர்கள் சேருதல் இல்லை மொத்தத்தில கல்வியே ஸ்தம்பிதம் அடைந்து விடுகிறது இது தமிழ்மக்களின் வரலாற்றிலேயே ஒரு பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதிற் சந்தேகமில்லை.

''கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும்
கற்கை நன்றே

என்பது தமிழ் மக்களின் அசையாத நம்பிக்கை. தம் நாட்டில் மண்வளம் இன்மையால் தமிழ் மக்கள் தம் மூளைவளத்தைப் பெருக்கினர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். இன்று இந்த மரபுக்கும் ஆபத்து வந்துவிட்டதோ என்று சிந்திக்கவேண்டியிருக்கின்றது.

சென்ற இதழ் தொடர்ச்சி

மங்களநாயகம் தம்பையாவின்

# நொறுங்குண்ட இருதயம்

(நாவல்)

''ஏன்? உன்னுடைய செய்கையும் படிப்பினைக்குரியனவல்லவா?''

''உலகம் என்னைப்பற்றி நன்மையாய்ப் பேசிக்கொள்ளுமென்பது ஐயமான காரியம். சிலருக்கு எனது செய்கை மிகவும் கூடாததாகத் தோன்றக் கூடும். ஆனால் நான் என்னுடைய மனத்திற்கு நீதியென்று கண்டதைச் செய்தேன்.

''பொன்மணீ! உன்னுடைய செய்கைகள் மெத்த அபூர்வமானவைகள். நீதி, நிதார்த்தம் நிதானம், மொழிதவறாவாக்கு இவையென்பதை உனது துணிகரமான செய்கையால் எல்லோருக்கும் நல்லாய் விளக்கியீருக்கிறாய்.......''

''கண்மணியின் பொறுமையே மிகவும் அபூர்வமானது எனது செய்கைகள் எல்லாம் அவளுடைய பொறுமைக்கு எம்மாத்திரம்?
(பக் 185 - 186)

இவ்வுரையாடலில் ஆசிரியையின் கதைகூறும் ஆர்வமும் அக்கதை சமூகத்துக்குப் படிப்பினையாக அமையவேண்டும் என்ற நோக்கும் தெளிவாகவே புலப்படுகின்றன. ஆனால் கண்மணி, பொன்மணி ஆகிய இருவரின் மீது மட்டுமன்றி அன்றைய பெண்ணினம் மீது (ஏன் இன்றைய பெண்ணினம் மீதும்கூட) நிலவும் பொதுவான ஒடுக்குமுறைகள், ஆணாதிக்க சுரண்டல்கள் ஆகிய பிரச்சினைகளின் மையவேரை இனங்கண்டு அதன் பன்முகப் பரிமாணங்களையும் பதிவு செய்யவேண்டுமென்ற நோக்குடன் ஆசிரியை செயற்பட்டதாக தெரியவில்லை. பிரச்சினைகளை மையப்படுத்தாமல் தனிமனிதரை மையப்படுத்தும் பார்வையின் விளைவு இது. மங்களநாயகம் அவர்களை மட்டும் நாம் இவ்வகையில் குறைகூறமுடியாது. தமிழின் தொடக்ககால நாவலாசிரியர்களான வேதநாயகம்பிள்ளை பி. ஆர். ராஜமையர் சிவை. சின்னப்பிள்ளை முதலிய பலரிடமும் இத்தகு பார்வையே நிலவியது. இதனாலேயே தமது படைப்புகளுக்கு தனிமனிதர்களின் பெயர் சுட்டிச் சரித்திரம், கதை ஆகிய தலைப்புக்களை அவர்கள் இட்டனர். அவ்வகையில் நொறுங்குண்ட இருதயம் உண்மையில் கண்மணி கதை தான். அவளது இருதயம் நொறுங்கிப் போன வரலாறுதான் முக்கியமானதாக இதிற் பேசப்படுகின்றது. அதனூடாக வாசகர்களின் அனுதாபத்தை (கண்மணி போன்ற) பெண்கள் மீது குவியச் செய்ய ஆசிரியை விழைந்துள்ளார் என்பது தெரிகிறது. பொன்மணியின் துணிகரச் செயற்பாடுகளை ஆசிரியை மனப்பூர்வமாக வரவேற்கிறார். ஆயினும் அன்றைய சமுதாயத்தில் அது எவ்வாறான கணிப்பைப் பெறும் என்பதில் அவருக்கு ஐயம் இருந்தது. இதனை மேலே சுட்டிய உரையாடற் பகுதி மூலம் உய்த்துணரலாம். பொன்மணி கதை துணைக் கதையாக இதில் அமைந்ததன் அடிப்படை இதுதான். பிரச்சினைகளை மையப்படுத்திய யதார்த்தப் படைப்பாக இதனை உருவாக்க ஆசிரியை முற்பட்டிருப்பாராயின் அதில் தலைமைப் பாத்திரமாக அமைந்திருக்கக் கூடியவள் கண்மணி அல்ல; பொன்மணியே என்பது கணிப்பு.

இந்நாவலிற் கிறிஸ்தவத்தின் பங்கு என்ன? ஓர் அமெரிக்க மிஷன் பாதிரியார் வருகிறார். அவர் கண்மணிக்கு ஆறுதல் தரும் உபதேசங்களைச் செய்கிறார்.

''கர்த்தருக்கு பிரியமான இருதயம் இங்கே இருக்கிறது. அவரை ஏற்றுக் கொள்ளுங்காலம் சீக்கிரம் வரும்....... மகளே! கர்த்தராகிய இயேசு இரட்சகரை இன்று தொட்டு உன் அன்பான பிதாவாய் ஏற்று அவரின் வழியில் நடக்க மாட்டாயா?''

என அன்பொழுக அவர் பேசுகிறார் (பக். 97). கண்மணி தன் வீட்டாருக்குத் தெரியாமல் கிறிஸ்தவத்தை அனுசரிக்கிறாள். இறுதிவரை கிறிஸ்தவப் பெண்ணாக வாழ்கின்ற அவளின் மரண வேளையில் வேதப் புத்தகத்தின் 46ஆம் சங்கீதம் வாசிக்கப்படுகின்றது. அவள் இறந்த பின்னர் அவளது குடும்பத்தினர் கிறிஸ்தவம் சார்கின்றனர்.

நாவலிற் கிறிஸ்தவம் கொள்ளும் முக்கிய தொடர்பு இவ்வளவுதான். கண்மணி மனத்துயரில் துடிக்கும் வேளைகளில் அப் பாதிரியாரின் போதனைகள் மன அமைதிக்குத் துணைபுரிகின்றன என்பது நாவலில் உய்த்துணரப்படும் செய்தி. இந்த மன அமைதியானது பிரச்சினைக்கான நிலையான தீர்வு ஆக ஆசிரியையாற் காட்டப்படவில்லை. நிலையான தீர்வாகியிருப்பின் கண்மணி கதை சோக காவியமாக முடிவெய்தியிருக்க வேண்டியதில்லை. எனவே இக்கதையில் நிகழும் சமயமாற்றம் சமகால சமூகச் செய்தி என்ற அளவிலேயே கொள்ளத்தக்கது. ஆசிரியை தமது சமய ஈடுபாட்டை நாவலிற் பதிவு செய்துள்ளார், அவ்வளவுதான். சமகாலத்தில் தமிழகத்தில் சு. மாதவையா ஆங்கிலத்தில் எழுதிய சத்தியானந்தன் (1990), கிளாரிந்தா (1915) ஆகிய நாவல்கள், பாதிப்புற்ற பெண்களுக்கு மீட்சிக்கான புகலிடமாகக் கிறிஸ்தவம் திகழ்ந்தமையைக் காட்டுவன. மதமாற்றம் அப்பெண்களுக்குப் புதுவாழ்வளித்தமை தெரிகிறது. நொறுங்குண்ட இருதய நாவலின் கதைப்போக்கு அவ்வாறு அமையவில்லை.

கதையைக் கூறிச் செல்லும் முறையிலே மங்களநாயகம் அவர்களின் பண்பாட்டுணர்வு தெளிவாகவே புலப்படுகின்றது. கண்மணி, பொன்மணி, பொன்னுத்துரை முதலியவர்களை உயர்ந்த குணநலன்களுள்ளவர்காளகக் காட்டும் அவர் உண்மை, நேர்மை பகட்டின்மை என்பனவற்றின் மீதான தனது பற்றுறுதியைப் பல்வேறு இடங்களிற் புலப்படுத்துகின்றார். பொன்னுத்துரைக்கும் பொன்மணிக்கும் உருவா⇨

## ஞாபகார்த்த ஆராதனை

ஏழாலை தெற்கு சபையைச் சேர்ந்த காலம் சென்ற தம்பிராஜா துரைரத்தினத்தின் 25ம் ஆண்டு ஞாபகார்த்த ஆராதனை ஏப்ரல் மாதம் 13ம் திகதி ஞாயிறு மாலை 6.15 மணிக்கு வெள்ளவத்தை தென் இந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெற்றது. வண A. ஜெயக்குமாரன், வண T. ஜெயச்சந்திரன், சேவக் சாம் அல்பிரெட் ஆராதனையில் பங்கு கொண்டார்கள். குடும்பத்தினர் விசேட பாடலைப் பாடினார்கள் சேவக் சாம் அல்பிரெட் அவர்கள் காலம் சென்ற T: துரைரத்தினம் அவர்கள் ஏழாலை தெற்கு திருச்சபைக்கு மாத்திரமல்ல அந்தக்

(4ம் பக்கம் பார்க்க)

## அற்புத....

கட்டியாக இருக்கக்கூடும். எனவே Operation பண்ணவேண்டும் என்று கூறி கண் பரிசோதனைக்கு அனுப்பினார்.

Eye Dr. Steether C. T. Scan report ஐ பார்த்து என்னை பரிசோதனை செய்து மூக்கில் வளர்ந்திருக்கும் சதை கண்ணுக்குள் (Eye orbital) வரை வளர்ந்திருப்பதால், Operation செய்தால் கண் நரம்புகள் பாதிக்கப்பட்டு கண்பார்வை பாதிக்கப்படும் எனறும், Operation பண்ணவில்லை என்றால், அந்த சதை மேலும் வளர்ந்து கண் பார்வை இழக்க நேரிடும் என்று கூறுனார். மீண்டும் Medical Dr. Doss மற்றும் அனைவரும் சேர்ந்து எனக்கு Sugar இருப்பதால் Sugar குறைந்ததும் 2 வாரம் கழித்து Operation செய்யலாம் என்று கூறினார்.

எனவே 2 வாரம் Medical Leave இல் இருந்தேன். Operation இல்லாமல் குணமாக்ஜெபிக்கும்படி பேராயருக்கு கடிதம் எழுதினேன். தொடர்ந்து நானும் என்மனைவி, பிள்ளைகளும், ஆண்டவரின் வாக்குத்தத்தத்தை படித்து கண்ணீருடன் ஜெபித்தோம். அநேக கர்த்தரின் பிள்ளைகளும் எனக்காக ஜெபித்தனர்.

அனைவரின் ஜெபத்தைக் கேட்டார் ஆண்டவர். 14-11-96 அன்று இரவு நித்திரையின் போது ஒரு பேரொளியை கண்டேன். அந்த ஒளியிலிருந்து தீயணைப்பு படையினர் பயன்படுத்தும் பைப்பிலிருந்து தண்ணீர் அடிப்பது போல் என் மூக்கில் அடிக்க, அப்போது என் மூக்கின் அடைப்பு சுண்ணாம்பு கரைவது போல் கரைந்து போகக் கண்டேன். மூக்கிலுள்ள அடைப்பைக் கர்த்தர் காட்டினார். விழித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் கூறினேன் கவலையோடிருந்த என் மனைவி பிள்ளைகளோடு, இந்த அற்புதக் காட்சியை பகிர்ந்துகொண்டேன்.

மறுநாளிலிருந்து மூச்கிலிருந்த அடைப்பு நீங்கி; சுவாசிக்கவும் நுகர்வதற்கு உணர்வுகள் காணப்பட்டது. கர்த்தர் பூரண சுகம் கொடுத்தார். என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து என் தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

எனக்காக ஜெபித்த தேவ பிள்ளைகளுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

D. பீட்டர், அருட்பணியாளர்

நன்றி புதுவாழ்வு

## நொறுங்குண்ட...

கும் காதல் மிக இயல்பாக, விரசமற்ற புனித உணர்வாக வெளிப்படுகின்றது.

> "உன்னை நான் காத்திருக்கலாமா? இது பொன்னுத்துரை பொன்மணியிடம் முன்வைத்த வினா.
>
> பொன்மணி வாய்திறந்து விடையளிக்க வெட்கித்து மௌனத்துடன் ஆம் என்பதற்குப் பதிலாகத் தன் தலையைச் சாய்த்தாள். இதைக் கண்டதும் பொன்னுத்துரைக்கிருந்த சந்தோஷம் எவ்வளவென விபரித்தலரிது. (பக். 46)

இந்த மௌனப் பொன்மணிதான் இக்காதலுக்குத் தடை வந்தகாலை துணிந்து காதலுடன் 'உடன்போக்கை' மேற்கொள்கிறாள்.

இந்நாவலில் கதைநிகழ் களங்கள் என்ற வகையில் யாழ்ப்பாணநகர், மண்டைதீவு ஆகிய இரு இடங்களின் பெயர்களே வெளிப்படையாகச் சுட்டப்பட்டுள்ளன. ஏனைய ஊர்ப் பெயர்கள் தரப்படவில்லை. ஆயின் ஆசிரியையின் இயற்கைக் காட்சி விளக்கங்களிலிருந்து கதை தொடங்கும் இடம் 'கீரிமலை - காங்கேசன்துறைச் சூழலை இனங்கண்டு கொள்ள முடிகிறது. ஆசிரியையின் ஊர் தெல்லிப்பழை எனத் தெரிவதால் அவர் தமது சூழலில் உள்ள மேற்படி கிராமியக் களங்களைத் தனது கதைநிகழிடங்களாகக் கொண்டிருக்கலாமென்று ஊகிக்கலாம். அருளப்பா கல்கத்தாவுக்குச் சென்று கல்வி கற்றவன் என்ற செய்தி மூலம் அக்கால இந்தியத் தொடர்பு புலனாகின்றது. அப்பாத்துரை பணியாற்றச் சென்ற இடம் என்ற வகையில் கொழும்புநகரும் கதைக்குள் வருகின்றது.

நாவலிற் புலப்படும் சமூக - பண்பாட்டுக் கோலங்கள், உணர்வு நிலைகள் என்பவற்றில் சில இங்கு சுட்டத்தக்கன. சுப்பிரமணியர் நேர்மையான அலுவலராக விருந்தும் மேலதிகாரியாற் பணி நீக்கம் செய்யப்பட்டமை அன்றைய அதிகார வர்க்க ஊழலை இனங்காட்டுவது. யாழ்ப்பாணப் பிரதேச சமுதாயம் அரசபணியை வாழ்க்கையின் உயர் இலட்சியமாகக் கொண்டிருந்தது. புகையிலை முதலிய பயிர்ச்செய்கைகள் மூலம் அதிக வருமானம் ஈட்ட முடிந்தாலும் அவ்வகைத் தொழில் புரிவோரை அது இரண்டாம் பட்சமானவர்களாகவே மதித்தது.

> ஒரு கமக்காரனின் மகளாகிய கண்மணிக்குக் கிடைத்த மாப்பிள்ளையிலும், தம் மகளுக்கு விசேஷமான மாப்பிள்ளை எடுக்கவேணுமென்பதே பொன்மணியின் பெற்றாரின் முழு வாஞ்சையுமாயிருந்தது. (பக். 42)

என்ற ஆசிரியையின் குறிப்பு இதனை உணர்த்தும். தம் மகளுக்கு வரும் மணமகனின் பொருளியல் தகுதி பற்றிய விடயத்தில் அக்காலப் பெற்றோர் கொண்டிருந்த மனப்பாங்கை,

> சடங்கு செய்வதானால் தாலி, கூறை முதலிய செலவுக்குக் கூட வழியற்றவனாயிருக்கிறான்.

என்ற குலோத்துங்கரின் கூற்று புலப்படுத்தும்.

பொன்னுத்துரைமீது பொய்க்குற்றம் சாட்டி அவனைச் சிறையிலடைக்க முயலும் அப்பாத்துரையின் நடவடிக்கைகள், தன் மனைவி தன்னைவிட்டு அவளுடைய தமையனிடம் பிரிந்து சென்றுவிட்ட நிலையில் அவள்மீது தொடராமுறி (விவாகரத்து) வழக்கெடுத்துக் கலியாண எழுத்தைத் தள்ளிவிடலாமோ என என்னும் அருளப்பாவின் உளப்பாங்கு (ப. 193) முதலியன அன்றைய காலகட்டச் சட்டத்துறைச் செயற்பாடுகளை எமக்கு அறியத்தரும் முக்கிய தரவுகளாகும். கயிலாசபிள்ளையர் தம்முடைய சொத்தின் ஒரு பகுதியை அதற்குரிய மகனுக்குக் கொடுத்தல், அவன் அதை அழித்துவிடுவான் என அஞ்சிப் பேரப் பிள்ளைகள் பெயரில் எழுதிவைப்பது அன்றையகால கட்டச் சொத்துரிமைச் சிந்தனைப் போக்கை உணர்த்திநிற்பது.

இந்நாவலின் புனைதிறனில் குறிப்பிடத்தக்க முக்கியதுவமுடைய ஒரு அம்சம் இதன் மொழிநடை. ஆசிரியர் தன் கூற்றாகவும் கதைமாந்தர் கூற்றுக்களாகவும் கையாளும் சொற்களிற் குறிப்பிடத்தக்கவை இன்று வழக்கிழந்துவிட்டன. பெருந்தொகையான பழமொழிகளையும் இவர் கையாண்டுள்ளார். சொற்கள், பழமொழிகள் என்பனவற்றுக்கு சில சான்றுகள்;

**சொற்கள்:**

கரத்தை — (மாட்டுவண்டி)
சுற்றாடல் பண்ணினார்கள் — (சுற்றிப் பார்த்தார்கள்)
வாறான — (கடுமையான)
கையிட்டிருக்கும் — (ஈடுபட்டிருக்கும்)
தரவழி — (ஒத்தபண்பினர்)
அட்டி — (தடை)
சடுத்தப்பிடியாய் — (ஒரேபிடியாய் எதிர்மாறாய்?)
கொடுகொடுகி — (ஒடுங்கி — சுருங்கி?)
சள்ளு — (தொந்தரவு)
சட்டச்சாக்கு — சட்டப்பை)

**பழமொழிகள்:**

"காடேற விட்டுக்குழுப்பற்றிய மாடு போல" (ப. 18)
"மாடு நினைத்த இடத்தில் பட்டியடைக்கலாம்" (ப. 21)
"பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" (ப. 23)
"புண்ணிற் புளியிட்ட வாறாய்" (ப. 23)
"ஐசுவரியம் தேர்ச்சி லொத்தது" (ப. 26)
"பிடித்த கொப்பும் விட்டு மிதித்த செப்பும் விட்டு" (ப. 47)
"பொக்கு வாய்ச்சி பொரிமாவை மெச்சியதுபோல்" (ப. 92)

இந்நாவலில் ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடைக்குச் சான்றாகப் பின்வரும் பகுதியைச் சுட்டலாம்,

> "..... கோயில் மேளவாத்தியத்தைக் கேட்டு வயோதிபரின் மாடுகள் வெருண்டோடி முன்சென்ற வாலிபனுடைய ஒற்றைக் "கரத்தையில்" மோதக் "கரத்தை" குடைக்குடிக்கப் பக்கத்திலுள்ள கானுக்குள் விழுந்தது. "கரத்தைக்காரன் தங்களுக்கு அபாயம் நேரிடாது தப்பிக் கொள்ளும் பொருட்டு மணற்றரையான ஓரிடத்தைக் கண்டு மாடுகள் அங்கிழுக்குமாறு நாணயத்தை அப்பக்கமாய்ச் சுண்டிப் பிடிக்க, அவைகள் மணலில் ஓடிக்கொள்ளச் சக்தியற்று நின்றுவிட்டன. மாடுகள் வெருண்டு புகைவானமாய் ஓடுவதைக் கண்ட கண்மணியும் அவள் தாயாரும் நடுங்கித் "தெய்வமே, தெய்வமே" என்று பதறிக் கத்தினார்கள். (பக். 6)

இவ்வாறு இந்நாவலில் அமைந்துள்ள மொழிநடை தனிநிலை ஆய்வுக்குரிய ஒன்றாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியின் யாழ்ப்பாணப் பிரதேச மொழிவழக்குப் பற்றி ஆய்வு மேற்கொள்ள விழைவோருக்கு அரியதொரு தகவற் களஞ்சியமாக இந் நாவல் அமைந்துள்ளது.

முற்றும்

## பாரத ரத்னா



ஜவஹலால் நேரு
மறைவு:- 27-5-64

ஞாப..,
கிராமத்திற்காகவும் தன் வாழ்நாளைச்செலவு செய்தார். A. M T. M. பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் மட்டுமல்ல அரசியலிலும் ஈடுபட்டு கிராமத்தை முன்நிலைக்கு கொண்டுவர உதவினார். எனக் குறிப்பிட்டார்.

இவர் திருமதி அருளம்மா அவர்களது கணவனும் வண. ஜெயச்சந்திரன், திருமதி மகிழ்ராஜா, திரு. ஞானேந்திரன், திரு ஜெயக்குமாரன், செல்வி நிமலரத்தினம், திரு சிறீதரன் இவர்களுடைய தந்தை என்பது குறிப்பிடத்தக்கது ஆராதனையின் பின் யாவரும் ஐக்கிய தேனீரில் கலந்து கொண்டனர்.

## தெல்லிப்பழைக்கு ஊழியன்

தெல்லிப்பழைத் திருச்சபைக்கு ஊழியனாக வண. கலாநிதி டி.எஸ். தியாகராசா அவர்களை ஆதீன செயற்குழு நியமித்துள்ளது. இவர் ஆகஸ்ட் மாதம் இப்பணியினை மேற்கொள்ள வேண்டுமெனவும் இவர் திரும்ப வருமளவும் திரு ஈனோக் புனிதராசா தெல்லிப்பழைத் திருச்சபை ஊழியனாகப் பணியாற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம்
பொன்விழா ஆண்டு

## சித்திரப் போட்டி

போட்டியில் பங்குபெற ஆயத்தமாகுங்கள்
போட்டிகள் பின்வரும் பிரிவுகளில் நடைபெறும்

1. ஆண்டு 5 முதல் ஆண்டு 8 வரை
2. ஆண்டு 9 முதல் ஆண்டு 11 வரை
3. ஆண்டு 12 முதல் ஆண்டு 13 வரை
4. எவரும் பங்குபற்றலாம் (Open)

விதிமுறைகள்:-

1. விண்ணப்பம் சபைக்குருவினால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்
2. வரைதல் தாள் (தரப்படும்) 12'' × 10'' பல வர்ணம் மற்றும் தேவையான உபகரணங்கள் போட்டியாளர்களே கொண்டு வரவேண்டும்

பொருள்

✲ கடந்த 50 ஆண்டுகளாக ஆதீனத்தினால் செய்யப்பட்ட பணிகளை சித்தரிக்கும் காட்சியாக அமைய வேண்டும்.

உ—ம் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவை, வீட்டுத்திட்டங்கள், நிவாரணப்பணி புனர்வாழ்வுப்பணி, சுவிஷேடப் பணி

விண்ணப்பங்கள் முடிவு திகதி 15-6-97

போட்டி நடைபெறும் இடம், திகதி என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

தென்னிந்திய திருச்சபை
வட்டுகோட்டை 26-5-97

திட்டப்பணிப்பாளர்

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் சகோ பி. தேவதாஸ் அவர்களால் 1997 ஆம் ஆண்டு மே 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.